Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.

Case No. C.C.No. 106/2024

Deposition of witness for Prosecution – P.W.5 Date : 16.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | ரமேஷ்குமார் | Village : | ஆலாங்குட்டை |
| Father's Name : | சுப்பிரமணியம் | Taluk : | அன்னூர் |
| Age : | 35 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2026 **(Accused Present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது அன்னூர் ஆலாங்குட்டை குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நான் அன்னூர் சத்தி சாலையில் சென்று கொண்டிருந்தபோது, அன்னூர் தாலுக்கா அலுவலகம் முன்பு விபத்து ஒன்று நடைபெற்று முடிந்திருந்தது. போலீசார் என் முன்னர் விபத்து நடந்த இடத்தில் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் தெரிந்த சரவணன் என்பவரும், சாட்சி கையொப்பம் செய்திருந்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள இரண்டாம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்து கொடுத்த பேப்பரில் என்ன விபரம் இருந்தது என்ற விபரம் எனக்குத் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். சாலமன் ராஜா என்ற நபருக்கு விபத்து நடைபெற்றதாக போலீசார் சொன்னார்கள். காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

| |
|---|
| Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct. |

S/d.V.Monika

District Munsif Cum Judicial Magistrate

Annur

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.

Case No. C.C.No. 106/2024

Deposition of witness for Prosecution – P.W.4 Date : 16.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | சரவணன் | Village : | பூலுவபாளையம் |
| Father's Name : | ஓதியப்பன் | Taluk : | அன்னூர் |
| Age : | 38 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2026 **(Accused Present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது அன்னூர் பூலுவபாளையத்தில் குடியிருந்து பந்தல் வேலைக்கு சென்று வருகிறேன். நான் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என் சித்தப்பா மகனுக்கு விபத்து ஏற்பட்டிருந்தபோது போனிலிருந்து தகவல் பெற்று அன்னூர் தாலுக்கா அலுவலகம் முன்பு சென்றிருந்தபோது போலீசார் என் முன்னர் விபத்து நடந்த இடத்தில் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் என் நண்பர் ரமேசும் சாட்சி கையொப்பம் செய்திருந்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த முதல் சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்து கொடுத்த பேப்பரில் என்ன விபரம் இருந்தது என்ற விபரம் எனக்குத் தெரியாது. விபத்து நடந்த இடத்தில் என் முன்பு தான் வரைபடம் வரைந்தார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதற்காக நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த கையொப்பத்தை ரோட்டில் வைத்து செய்து கொடுத்தேன்.

| |
|---|
| Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct. |

S/d.V.Monika

District Munsif Cum Judicial Magistrate

Annur